காலை முரசு

பக்கங்கள்:-22

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | மார்கழி 09 | வெள்ளிக்கிழமை | 26.12.2025 | அதிர்வு 148

## ரணிலும் சஜித்தும் இணைய வேண்டும்

ரவி வலியுறுத்து



ரணில் விக்கிரம சிங்க மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகியோர் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்று நாடாளுமன்ற

06

# பொய் கூறி ஆட்சியை தக்கவைக்க முடியாது!

## கொழும்பு மாநகர சபையின் 'பட்ஜட்' தோற்கடிக்கப்பட அதுவே காரணம் என்று முஜிபுர் ரஹ்மான் எம்.பி. பதிலடி

"பொய் வாக்குறுதிகளை அளித்து ஆட்சியை கைப்பற்றிக்கொள்ள முடியும். ஆனால் பொய் கூறி ஆட்சியை தக்கவைத்துக்கொள்ள முடியாது என்பதை அரசு புரிந்துகொள்ள வேண்டும். கொழும்பு மாநகர சபை வரவு - செலவு திட்டம் தோற்கடிக்கப்படவும் அதுவே காரணமாகும்."

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

06



# சுனாமிப் பேரழிவின் நினைவு தினம் இன்று

## நாடு முழுவதும் அஞ்சலி நிகழ்வுகள்

இலங்கையின் வரலாற்றில் ஆறாத வடுவை ஏற்படுத்திய சுனாமிப் பேரழிவின் 21ஆம் ஆண்டு நினைவு தினம் இன்று அனுஷ்டிக்கப்படவுள்ளது.

35 ஆயிரத்துக்கும் அதிகமான உயிர்களைப் பலிகொண்ட அந்தப் பேரழிவையும், அதன் பின்னர் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களால் உயிரிழந்தவர்களையும் நினைவுகூர்ந்து, ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 26ஆம் திகதி தேசிய பாதுகாப்பு தினமாகக் கடைப்பிடிக்கப்படுகின்றது.

இதன் பிரதான நினைவு நிகழ்வு காலி, பெரலிய சுனாமி நினைவிடத்துக்கு அருகில் இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதேபோல், உயிரிழந்த உறவுகளை நினைவுகூரும் வகையில், இன்று முற்பகல் 9.25 மணி முதல் 9.27 மணி வரை நாடு முழுவதும் இரண்டு

06






'திருவிளையாடல்' சினிபாப் படப் பாணியில் 'பிரிக்க முடியாதது எதுவோ?' – என்று ஒரு கேள்வி கேட்டால் 'இலங்கைத் தமிழரசுக் கட்சியும் உள்கட்சிப் பிரச்சினையும்' என்று குறிப்பிடலாம் எனத் தோன்றுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று மாலை முதல் கட்சிக்குள் கனன்று கொண்டிருக்கும் ஒரு விடயத்தைக் குறிப்பிடலாம் என்று நினைக்கிறேன். கட்சியின் தூணாக விளங்கிய மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் இருபதாவது ஆண்டு நினைவேந்தல் வழமை போல் நேற்று நடைபெற்றது.

மட்டக்களப்பு மாநகர சபை மண்டபத்தில் நேற்று மாலை நடந்த இந்த நிகழ்வை கட்சியின் வாலிப முன்னணியின் மட்டக்களப்பு மாவட்டக் கிளை ஒழுங்கு செய்திருந்தது. கட்சியின் வாலிப முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட தலைவர் சோபனன. நிகழ்வுக்குத் தலைமை வகித்தார்.

கட்சியின் மாவட்ட தலைவர் இரா சாணக்கியன் எம்.பி. நேற்றுக் கொழும்பில் நின்றமையால் இக்கூட்டத்தில் பங்கு பற்றவில்லை.

06



# ராஜபக்ஷக்களின் நிதியை ஏன் இன்னும் மீட்கவில்லை?

## இப்படி அநுர அரசிடம் நாமல் எம்.பி. கேள்வி

"உகண்டாவில் ராஜபக்ஷக்களால் பதுக்கப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட டொலரை அநுர அரசாங்கம் ஏன் இன்னமும் மீட்கவில்லை?" – என்று மொட்டுக் கட்சியின் எம்.பி. நாமல் ராஜபக்ஷ கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கத்தினர், ராஜபக்ஷக்களின் நிதி உகண்டாவில் பதுக்கப்பட்டுள்ளது என்று தொடர்ச்சியாகக் கூறிவந்தனர். ஆனால், இதுவரை அந்த நிதியை மீட்கவில்லை.

அரசாங்கத்தால் குறிப்பிடப்பட்ட நிதியை மீட்பதற்கு அனைத்து ஒத்துழைப்பையும் நாங்கள் வழங்குவோம். அந்த டொலரை மீட்பதற்குப் பொருத்தமான காலமாகவும் இக்காலமே அமைந்துள்ளது. இதற்காக சத்தியக் கடதாசிகளை வழங்கவும் தயாராக உள்ளேன்.

ஐக்கிய தேசியக் கட்சியும், ஐக்கிய மக்கள் சக்தியும் இணைந்து செயற்படுவது அந்த இரு கட்சிகளின் தனிப்பட்ட விருப்பம். ஆனால், நாட்டின் ஜனநாயகம் பேணப்படுவதற்கு இந்த இணைவு அவசியமானது. இணைந்து செயற்பட வேண்டிய இடங்களில் எதிரணியாக நாமும் இணைந்து செயற்படுவோம்." – என்றார்.

# இந்தியாவுடனான ஒப்பந்தத்தை அரசு வெளிப்படுத்த வேண்டும்!

## ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்களை அநுர அரசு வெளிப்படுத்த வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் வலியுறுத்தினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இந்த வருடம் இலங்கைக்கு வந்திருந்தார். இதன்போது, இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையில் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு முக்கியமான விடயங்களில் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. எனினும், ஒப்பந்தங்களின் அம்சங்கள் தொடர்பில் இன்னமும் வெளிப்படுத்தப்படவில்லை.

இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்பில் நாடாளுமன்றத்திலும் வெளிப்படுத்தப்படவில்லை. அத்துடன், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாகவும் பெறமுடியாத நிலையே உள்ளது. எனவே, ஒப்பந்தங்களின் அம்சங்கள் தொடர்பில் அரசு வெளிப்படுத்த வேண்டும்." – என்றார்.





# ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை தொடர்பில் நீதியை நிலைநாட்ட சாணக்கியன் வலியுறுத்து

மறைந்த மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் வலியுறுத்தியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் நேற்றுக் கூறியவை வருமாறு:-

தமிழரசுக் கட்சியின் மறைந்த மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் அவர்களின் இருபதாம் ஆண்டு நினைவு தினம் இன்றாகும்(நேற்றாகும்). அவரின் இழப்பு எமக்கும் மக்களுக்கும் அவரின் குடும்பத்தாருக்கும் ஓர் பேரிழப்பாகும். வழமை போல் இன்றைய தினமும் தமிழரசுக் கட்சியினரால் மட்டக்களப்பு மாநகர சபை மண்டபத்தில் நினைவேந்தல் இடம்பெற்றது.

நீண்ட காலத்துக்குப் பின்னர் இலங்கை வந்த அவரது மகனின் வேண்டுகோளுக்கு அமைய அவரது கொலைக்கு நீதி கோரும் வழக்கு மீள எடுத்துக் கொள்ளப்பட்டு அதற்கான நீதி கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கைக்கு அமைய எமது கட்சியின் பதில் பொது செயலாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரனினால் சட்டமா அதிபருக்கு பல மாதங்களுக்கு முன் கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டது.

அத்துடன் இவ் விடயம் தொடர்பில் ஜனாதிபதியிடம் நேரடியாக நீண்டகாலமாக நாசாளுமன்றத்தில் மூன்று தடவைக்கு மேல் என்னால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. ஆனால் இன்றளவிலும் இதற்கான நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ளவில்லை. இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு நீதி கிடைக்கும் வரை எமது போராட்டம் தொடரும்.

ஜனாதிபதிக்கு சுமந்திரனினால் அனுப்பப்பட்ட கடிதத்தின் விவரம் பின் வருமாறு:-

"மாண்புமிகு ஜோசப் பரராஜசிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களின் கொலை. குற்றம் சாட்டப்பட்டவர் - சிவனேசத்துரை சந்திரகாந்தன், மட்டக்களப்பு உயர் நீதிமன்ற வழக்கு இலக்கம்: HCD/3057/17"

மரணமடைந்த ஜோசப் பரராஜசிங்கம் அவர்களின் மகனான டேவிட் ஜோசப் அவர்களின் சட்ட ஆலோசகராக நான் இக்கடிதத்தை எழுதுகிறேன். மேற்குறிப்பிட்ட வழக்கில், குற்றம் சாட்டப்பட்டவர்களுள் சிவனேசத்துரை சந்திரகாந்தன் உட்பட அனைவருக்கும் எதிரான குற்றப்பத்திரிகையை சட்ட மா அதிபர் வாபஸ் பெற்றமையை நீங்கள் நன்கு அறிந்திருப்பீர்கள். வழக்கு தள்ளுபடி செய்யப்படும் முன், குற்றம் சாட்டப்பட்டவர் பிணையில் விடுவிக்கப்பட்டபோது, பாதிக்கப்பட்ட தரப்பின் சார்பில் நான் நீதிமன்றத்தில் ஆஜராகி பிணை வழங்கப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்திருந்தேன்.

தற்போது, ஜோசப் பரராஜசிங்கம் அவர்களின் மகன், தந்தையின் கொலை வழக்கை மீண்டும் திறந்து விசாரணை நடத்துமாறு உங்களிடம் பிரதிநிதித்துவம் செய்யுமாறு எனக்கு அறிவுறுத்தியுள்ளார். நீங்கள் அறிந்ததுபோல், நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில், தேவாலயத்திற்குள் நடைபெற்ற கிறிஸ்துமஸ் திருப்பலியின் போது ஜோசப் பரராஜசிங்கம் கொலை செய்யப்பட்டார். ஆனால் மேற்கண்ட முறையில் வழக்கு கைவிடப்பட்டதன் பின்னர், அவரது கொலைக்காக இதுவரை எவரும் வழக்குத் தொடரப்பட்டதுமில்லை, தண்டனை பெற்றதுமில்லை. இவ்விண்ணப்பத்திற்கு தங்களின் விரைவான பதிலை எதிர்பார்க்கின்றேன்."

- என்று அந்தக் கடிதம் உள்ளது.

- இந்த விடயங்களை சாணக்கியன் தற்போது சுட்டிக் காட்டியுள்ளார்.

# இறக்காமம் வயலில் காட்டு யானை உயிரிழந்தமை குறித்து விசாரணை





(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டம் இறக்காமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆஸ்பத்திரி சேனை - கண்டம் வயல் பகுதியில் உயிரிழந்திருந்த காட்டு யானை ஒன்று சடலமாக மீட்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் காட்டு யானை உட்பட சில யானைகள் அப்பகுதிகளில் நடமாடி திரிந்தமையை தாம் அவதானித்திருந்தனர் என அப்பகுதி மக்கள் குறிப்பிட்ட நிலையில் கடந்த புதன்கிழமை யானையின் சடலம் கண்டெடுக்கப்பட்டிருந்தது.

அந்த இடத்திற்கு வருகைதந்த அதிகாரிகள் யானையின் உடலை மீட்டுள்ளனர். யானை உயிரிழந்தமைக்கான காரணம் பற்றிய மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளும் இறக்காமம் பொலிஸாரும் இணைந்து இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அண்மைக்காலமாக இப்பகுதிகளில் நூற்றுக்கணக்கான யானைகள் வருகை தந்த வண்ணம் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# சிறுமி டினோஜாவின் மரணத்திற்கு நீதியான விசாரணை நடத்துங்கள்

## ரவிகரன் எம்.பி. வலியுறுத்து








(பா.சதீசன்)

முல்லைத்தீவு – சிலாவத்தை பகுதியைச் சேர்ந்த சிறுமி குகநேசன் டினோஜாவின் சந்தேகத்திற்கிடமான மரணத்திற்கு நீதியான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டுமெனத் தெரிவித்த வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், சிறுமியின் மரணம் தொடர்பில் நீதியான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு நாடாளுமன்றில் தம்மால் மனு கையளிக்கப்படுமெனவும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் சிறுமியின் மரணத்தில் மருத்துவத் தவறு இருப்பதாக பரிசோதனை அறிக்கைகள் வெளிவந்தால், உரிய தரப்பினருக்கு மிகக் கடுமையான தண்டனைகள் வழங்கப்படுமென இதன்போது முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதாரசேவைகள் பிரதிப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே இவ்விடயம் தொடர்பில் பேசப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் கருத்துத் தெரிவிக்கையில் –

முல்லைத்தீவு – சிலாவத்தைப் பகுதியைச் சேர்ந்த குகநேசன் டினோஜா என்னும் சிறுமியின் மரணத்தில் சந்தேகங்கள் இருக்கின்றன என எனக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இதேபோல் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் இவ்வாறான சந்தேகத்திற்கிடமான மரணச் சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

இதற்குமுன்னர்வினோதரன்வினோதா என்னும் பெண்ணினுடைய மரணம் தொடர்பிலும் என்னிடம் முறைப்பாடு செய்யப்பட்டது.

இவ்வாறு கிடைக்கப்பற்ற முறைப்பாட்டிற்கு அமைவாக அந்தப் பெண்ணின் குடும்பத்தாருடனும், வைத்தியர்களுடனும் ஏற்கனவே கலந்துரையாடியிருந்தேன்.

இதனையடுத்து அப்பெண்ணின் மரணம் தொடர்பிலே அவரது குடும்பத்தாரினால் என்னிடம் அறிக்கையொன்றும் கையளிக்கப்பட்டிருந்தது.

அந்த வகையில் வினோதரன் வினோதாவின் மரணம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்குமாறு நாடாளுமன்றில் மனு ஒன்றினைச் சமர்ப்பித்துள்ளேன். சபாநாயகராலும் அந்த மனு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே அந்த மரணம் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்படும்.

இதேவேளை குகநேசன் டினோஜாவின் மரணம் தொடர்பிலும் தற்போது என்னிடம் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அத்தோடு இத்தகைய மரணச் சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றமையால் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்குச் செல்வதற்கே பயமாக இருப்பதாக மக்கள் என்னிடம் முறையிடுகின்றனர்.

மேலும் குகநேசன் டினோஜாவின் சந்தேகத்திற்கிடமான மரணத்திற்கு நீதியான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு நாடாளுமன்றிலும் வலியுறுத்துவேன்.

குறிப்பாக இந்த சந்தேகத்திற்கிடமான மரணத்திற்கு உரிய விசாரணைகளை முன்னெடுக்குமாறு நாடாளுமன்றில் சபாநாயகரிடம் மனுவினைக் கையளிப்பேன் – என்றார்.

இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதாரசேவைகள் பிரதிப் பணிப்பாளர் இதன்போது பதிலளிக்கையில் –

வினோதரன் வினோதாவினுடைய சந்தேகத்திற்கிடமான மரணம் தொடர்பில் மாகாண சுகாதார பணிமனையினால் விசாரணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவினால் விரைவில் விசாரணைகள் முன்னெடுக்கப்படும்.

அதேபோல் குகநேசன் டினோஜாவின் சந்தேகத்திற்கிடமான மரணம் தொடர்பிலும் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்படும்.

குறிப்பாக தற்போது எம்மால் குறித்த சிறுமியினுடைய பிணப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. குருதி, சிறுநீர் மாதிரிகள் கொழும்பிற்கு பரிசோதனைக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் மருந்தின் அளவு கூடுதலாகச் செலுத்தப்பட்டதால்தான் சிறுமியின் மரணம் நிகழ்ந்ததாக பரிசோதனை அறிக்கை வெளிவந்தால், உரிய தரப்பினருக்கெதிராக மிகக் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனத் தெரிவித்தார்.

மேலும் இதன்போது கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர்களான மகாதேவா குணசிங்கராசா மற்றும் தொம்மைப்பிள்ளை பவுள்ராஜ் ஆகியோரும் இந்த சிறுமியின் சந்தேகத்திற்கிடமான மரணத்திற்கு நீதியான விசாரணையினைக் கோரியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



# புத்தளம் மாவட்ட ஊடகவியலாளர்களுக்கு மாத்தறை ஊடகவியலாளர்கள் நிவாரணம்






**(கற்பிட்டி நிருபர் சியாஜ்)**

மாத்தறை ஊடகவியலாளர்கள் சங்கம் கருணையின் கை நிவாரண வேலைத்திட்டத்தின் கீழ் "தென்னை மரத் தோப்புகளிலிருந்து பனை மரங்கள் வரை" என்ற தலைப்பில் வழங்கப்பட்டு வரும் அனர்த்த நிவாரணத் திட்டத்தின் நான்காவது கட்டமாக புத்தளம் மாவட்டம் மற்றும் வடக்கு மாகாணத்தில் அனர்த் தத்தினால் பாதிக்கப்பட்ட ஊடகவியல- ாளர்களுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை மற்றும் புதன்கிழமைகளில் வழங்கி வைத்து அப்பணியை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.

மாத்தறை ஊடகவியலாளர்கள் சங்கத்தின் செயலாளர் யசந்த அரிய சேன, இந்த முயற்சி புத்தளம் மாவட் டம் மற்றும் வடக்கு மாகாணத்தை உள் ளடக்கியது என்றார்.

சமீபத்திய டித்வா சூறாவளியால் கடுமையாக பாதிக்கப்பட்ட ஏனைய ஊடகவியலாளர்களுக்கு ஆதரவளிப் பதே இந்த பணியின் நோக்கமாகும்.

கருணையின் கை திட்டத்தின் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டங்கள் வெற்றிகரமாக நிறைவடைந்தமையைத் தொடர்ந்து, புத்தளம் மாவட்டம் மற்றும் வடக்கு மாகாணத்தில் அனர்த்தம் காரணமாக இழப்புகளைச் சந்தித்த 20 ஊடகவியலாளர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டது.

இந்தத் திட்டத்திற்கு மாத்தறையில் உள்ள ஹரிச்சந்திர மில்ஸ் பிஎல்சி மற்றும் தேவிநுவர உபுல்வன் ஸ்ரீவிஷ்ணு மகா தேவாலயா ஆகியவை நிதி யுதவி செய்திருந்தன எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது

இந்தக் கட்டத்தின் வெற்றிக்கு பல் வேறு மதத் தலைவர்களும் பொது நபர்களும் பங்களித்தனர். வெலிகம பிரதேச சபையின் பதில் தலைவர் தென கம ராகுல தேரர், வென். யஹல்முல்லே சந்தனந்த தேரர், வென். திஸ்ஸ மஹாராம இந்தானந்த தேரர், வென். மாவெல்லே சந்திம தேரர், மற்றும் வென். ஃபாதர் சார்லஸ் ஹேவாவசம் (மாத்தறை அன்னையின் தேசிய ஆல யத்தின் நிர்வாகி), முன்னாள் அமைச் சர் டலஸ் அழகப்பெரும, ஆயுர்வேத மருத்துவர் புத்திக செனவிரத்ன, தரிந்து யாப்பா அபேவர்தன, மற்றும் நிஹால் ரஞ்சித் (லங்கா ரோல்ஸ் தலைவர்) ஆகியோர் பங்களித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# வவுனியா – வீரபுரத்தில் வாளால் வெட்டி இளைஞனை படுகொலை செய்தமை தொடர்பில் மூன்று பேர் கைது

**(கி.வசந்தன்)**

வவுனியா – வீரபுரம் பகுதியில் இளை ஞர் ஒருவர் வாளால் வெட்டிப் படு கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர் பில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்த னர்.

கடந்த 21 ஆம் திகதி செட்டிகுளம், வீரபுரம் பகுதியில் இளைஞர்களிடையே ஏற்பட்ட மோதலின் போது வவுனியா, தவசிகுளம் பகுதியைச் சேர்ந்த 19 வய துடைய யோ. அபிசாந்த் என்ற இளைஞர்



வாள் வெட்டுக்கு இலக்காகி மரண மடைந்திருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தடவி யல் பொலிஸாரின் உதவியுடன் விசா ரணைகளை முன்னெடுத்த செட்டிகுளம் பொலிஸார் மூவரைக் கைது செய்துள்ள னர். அவர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தொலைபேசி கலந்துரையாடலில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் வலுப்பெற்றதை யடுத்து இந்தக் கொலை நடத்தப் பட்டுள்ளமை ஆரம்ப விசாரணைக ளில் தெரியவந்துள்ளதாகவும் பொலி ஸார் மேலும் தெரிவித்தனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆயினும் மாவட்டக் கிளையின் செயலாளர் சிறிநேசன் எம்.பி. அங்கு பிரசன்னமாகி இருந்தார்.

ஏற்கனவே கட்சியின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினராகச் செயல்பட்ட பின்னர், கட்சி முடிவை மீறி, கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளராகக் களம் இறங்கி, அதன் காரணமாகக் கட்சியிலிருந்து நிரந்தரமாக வெளியேற்றப்பட்ட முன்னாள் எம்.பியான அரியநேத்திரனும் அந்த நிகழ்வுக்கு வந்திருந்தார். அழைப்பிதழ் ஏதும் அவருக்கு வழங்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனாலும் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்திற்கு மரியாதை கொடுத்து அந்த நிகழ்ச்சிக்கு அவர் தாமாகவே வந்திருப்பார் என்று நினைக்கிறேன்.

கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்ட அவருக்கு, கட்சியின் நிகழ்வில் இடம் அளிக்க வேண்டிய தேவை இருக்கவில்லை, அப்படியிருக்க அவரை நிகழ்வில் சேர்த்துக் கொள்ளும்படி கட்சியின் மாவட்டக் கிளைச் செயலாளர் சிறிநேசன் எம்.பி. நிகழ்வின் ஏற்பாட்டாளர்களான வாலிப முன்னணி நிர்வாகிகளிடம் வலியுறுத்தியிருக்கின்றார். ஆனால் அதற்கு அவர்கள் இணங்க மறுத்து விட்டனர்.

இந்தச் சமயத்தில் நிகழ்ச்சியை ஆரம்பித்து ஈகைச்சுடர் ஏற்றுவதற்கான பிரமுகரை அழைக்க வேண்டிய சமயத்தில், நிகழ்ச்சி ஒழுங்கமைப்பு மேற்கொண்ட ஒலிபரப்பாளரிடம் தாமே நேரில் சென்ற சிறிநேசன் எம்.பி. அந்த விளக்கேற்றலுக்கு அரியநேத்திரனை அழைக்கும் படி கூற, அவர் அதன்படியே அழைத்துள்ளார்.

ஒலிபெருக்கியில் பெயர் அழைக்கப்பட்ட நிலையில் அதைக் குழப்ப விரும்பாத கட்சியின் வாலிப முன்னணியினர் அவ்வாறு அரியநேத்திரன் மேடைக்கு வந்து ஈகச்சுடர் ஏற்ற அனுமதித்து நின்றனர்.

எனினும், கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்ட ஒருவரை கட்சியின் நிகழ்வுக்கு கட்சி தலைவர்களிடம் கேட்காமல் தம்பாட்டில் சிறிநேசன் எம்.பி. அதிரடியாகப் புகுந்து மேடை ஏற்றியமை கட்சிக்குள் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிகின்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து விலகி, தனித்துச் செயலாற்றிய சமயமே கூட்டமைப்பில் அங்கத்துவம் வகித்த மற்றைய கட்சிகள் வெளியேறி, கடந்த ஜனாதிபதி தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளராக அரியநேத்திரனை களம் இறக்கியிருந்தன.

கட்சிக் கட்டுப்பாட்டை மீறிச் செயற்பட்டமையால் அரியநேத்திரன் தமிழசுக் கட்சியில் இருந்து நிரந்தரமாக வெளியேற்றப்பட்டார்.

அப்போது, தமிழரசுக்கு எதிரணியிலிருந்த சங்குக் கூட்டணி, இப்போது தமிழரசோடு மீண்டும் இணைந்து செயல்பட வந்து விட்டமையினால், சங்கு கூட்டணியைச் சேர்க்கும் போது, அரியநேத்திரனை ஏன் இப்போது கட்சிக்குள் மீளச் சேர்க்கக் கூடாது என்பது சிறிநேசன் போன்றவர்களின் கேள்வியாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

கட்சியின் மாவட்டக் கிளை தலைவர் இரா.சாணக்கியன் எம்.பி. மட்டக்களப்பில் இல்லாத சமயத்தில், கிடைத்த அந்த அரிய சந்தர்ப்பத்தை வாய்ப்பாகப் பயன்படுத்தி, கட்சி நிகழ்வு ஒன்றில் இப்படி கட்சியின் மாவட்ட செயலாளர் சிறிநேசன் நடந்து கொண்டமை கட்சி உறுப்பினர்களைப் பெரும் அதிர்ச்சியில் ஆழ்த்தி இருப்பதாகத் தெரிகிறது.

நேற்று மாலை நிகழ்ச்சி முடிந்த நேரத்தில் இருந்து வாட்ஸ் அப் குழுக்களில் தமிழரசின் உள்கட்சி வட்டாரங்களில் படு சூடாக இந்த விவகாரம் பிய்த்துதறப் படுவதாக அறிய முடிகிறது.

கட்சியின் கட்டுக்கோப்பு மீண்டும் மாவை காலத்தை நோக்கி சீர்கெட்டு வருவதாக பொதுவாகத் தோன்றுகின்றது.

கட்சித் தலைவரும் செயலாளரும் நேரடியாக தலையிட்டு ஒழுங்கு நடவடிக்கைகளை எடுக்காமல் விட்டால், கட்சியில் உட்கட்சி மோதல் உச்சம் பெற்று, கட்சி இன்னமும் நடுவீதிக்கு வருவது தவிர்க்க முடியாததாக இருக்கும் என்றே தோன்றுகிறது.

## சுனாமிப் பேரழிவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி....)

நிமிட மௌன அஞ்சலி செலுத்துமாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

டித்வா சூறாவளி காரணமாக நிலவும் தற்போதைய சூழலைக் கருத்தில் கொண்டு, இம்முறை மாவட்ட ரீதியில் சர்வ மத வழிபாட்டு நிகழ்வுகளை முன்னெடுக்கவும் அனர்த்த மேலாண்மை மத்திய நிலையம் தீர்மானித்துள்ளது.

## ரணிலும் சஜித்தும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

இதன்போது ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி என்பவற்றை ஒன்றிணைப்பது தொடர்பில் முன்னெடுக்கப்படும் முயற்சி தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ரணில் விக்கிரமசிங்க தலைமைப் பதவியில் இருந்து விலகுகின்றாரா அல்லது இல்லையா என்பது முக்கியம் அல்ல. அவரும், சஜித்தும் இணைந்து செயற்பட வேண்டியதுதான் முக்கியம்.

ஒன்றிணைவுக்காகவே நானும் பாடுபட்டு வருகின்றேன். எனினும், அதனை நான் வெளியில் காட்டிக்கொண்டு பிரசாரம் தேடவில்லை.

அதேபோல் சிறு கட்சிகளையும் இணைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளேன்.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்பன இணைந்த பின்னர் ஏனைய சிறு கட்சிகளையும் இணைத்துக்கொள்ள வேண்டும். அதற்கான சிறப்பான ஆரம்பம் கொழும்பில் வழங்கப்பட்டுள்ளது.” – என்றார்.

## பொய் கூறி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொழும்பு மாநகர சபையின் அடுத்த வருடத்துக்கான வரவு – செலவுத் திட்டம் தோல்வியடைந்தமை தொடர்பில் ஆளும் தரப்பினர் தெரிவித்து வரும் குற்றச்சாட்டுக்களுக்கு ஊடகங்களுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“கொழும்பு மாநகர சபையின் வரவு – செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டமை தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்கள் சிலர் என்னைக் குறை கூறி வருகின்றனர். ஆனால், மாநகர சபையின் மேயர் தெரிவு செய்யும் வாக்களிப்பின்போது, இரகசிய வாக்கெடுப்பே இடம்பெற்றது.

அப்போது பகிரங்க வாக்களிப்புக்குச் செல்வோம் என நாங்கள் அனைவரும் தெரிவித்திருந்தோம். ஆனால், மாகாண ஆணையாளருக்கு ஆலோசனை வழங்கி அரசு பலவந்தமாக இரகசிய வாக்கெடுப்புக்குச் சென்றது. அந்த இரகசிய வாக்கெடுப்பில் வாக்குகளைப் பெற்றுக் கொள்ள பல்வேறு பொய் வாக்குறுதிகளை வழங்கி இருந்தார்கள்.

இவ்வாறு பொய் வாக்குறுதிகளை வழங்கியே மாநகர சபையின் ஆட்சியை அன்று பிடித்துக்கொண்டனர். ஆனால், இன்று பகிரங்க வாக்கெடுப்பொன்றுக்கு சென்றபோது, பொய் வாக்குறுதி வழங்கி பெற்றுக்கொண்ட அதிகாரத்தை தக்க வைத்துக்கொள்ள முடியாமல் போனது.

அதனால்பொய்கூறிஆட்சியைக்கைப் பற்றிக்கொள்ள முடியும். ஆனால் பொய் கூறி ஆட்சியைக் கொண்டு செல்ல முடியாது என்பதை நாங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

மேயர் தெரிவின்போது, ஜனாதிபதி, அமைச்சர்கள் ஊடாக பொய் வாக்குறுதி அளித்து, ஆதரவைப் பெற்றுக்கொண்ட பின்னர், 6 மாதம் சென்றும் அதனை நிறைவேற்ற முடியாமல்போனதால், அவர்கள் தற்போது அரசுக்கு எதிராக வாக்களித்துள்ளனர். இதுதான் கொழும்பு மாநகர சபையில் இடம்பெற்றது. அதற்கு என்னைக் குறைகூறி பயனில்லை. அவர்கள், ஏன் பொய் கூறி ஏமாற்றினீர்கள் என்று ஜனாதிபதியிடம் கேட்க வேண்டும்.

அதனால் பொய் கூறி ஆட்சியைக் கைப்பற்றிக்கொள்ள முடியும். ஆனால் பொய் கூறி ஆட்சியைக் கொண்டு செல்ல முடியாது என்ற யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளுங்கள் என்ற செய்தியையே அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகின்றேன். இதேபோன்றே இன்னும் பல உள்ளூராட்சி சபைகளில் அரசின் வரவு – செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

அதனால் தற்போது வாக்களிப்பு நடத்தாமல் வரவு – செலவுத் திட்டத்தை நிறைவேற்றிக்கொள்ள அரசு பல்வேறு தந்திரங்களைக் கையாண்டு வருகின்றது. ஆனால் அந்த விளையாட்டுக்களைத் தொடர்ந்து செய்ய முடியாது என்பதை அரசு தெரிந்துகொள்ள வேண்டும். ஜனநாயக ரீதியான தோல்விகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். அரசுக்குப் பெரும்பான்மை இல்லை என்பதை ஏற்றுக்கொண்டு மற்றவர்களுக்கு இடமளிப்பதே ஜனநாயக முறையாகும்.

அத்துடன் கொழும்பு மாநகர சபை மேயர் மனச்சாட்சி தொடர்பில் கதைக்கின்றார். அவருக்கு மனச்சாட்சி இருந்திருந்தால், அன்று மேயர் தெரிவில் பகிரங்க வாக்கெடுப்புக்குச் சென்றிருக்க வேண்டும். அவருக்கு மனச்சாட்சி இல்லை என்பதாலேயே உறுப்பினர்களுக்குப் பொய் வாக்குறுதிகளை வழங்கி, அவர்களின் வாக்கைப் பெற்றுக்கொண்டார். அதனால் மனச்சாட்சி இல்லாதவர்கள் மனச்சாட்சி தொடர்பில் கதைப்பதுதான் வேடிக்கையாக இருக்கின்றது. தங்களுக்கு ஆதரவளித்தவர்களைத் தொடர்ந்து தக்கவைத்துக்கொள்ள முடியாமல் போனமைக்கு நாங்கள் காரணம் இல்லை. அது அவர்களின் இயலாமையாகும்.” – என்றார்.









# கொச்சிக்கடை அந்தோனியார் ஆலயத்தில் இடம்பெற்ற நத்தார் நள்ளிரவு ஆராதனை!



கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு கொழும்பு, கொட்டாஞ்சேனை, கொச்சிக் கடை புனித அந்தோனியார் ஆலயத்தில் நேற்று முன்தினம் நள்ளிரவு ஆராதனை வணக்கத்திற்குரிய பிதா யூட் சமந்த பெர்ணான்டோ தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் யேசுபாலனுக்கு ஆசீர்வாதம் நடைபெற்று ஊர்வலமாக எடுத்துச்செல்லப்படுவதையும் நள்ளிரவு ஆராதனை நடைபெறுவதையும் படங்களில் காணலாம்.

**(படப்பிடிப்பு : - எஸ். எம். சுரேந்திரன்)**







நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# நாம் தயாரா?

‘இயற்கை எனது நண்பன், வாழ்க்கை எனது தத்துவாசிரியன், வரலாறு எனது வழிகாட்டி.’ - என்றார் தலைவர் வே.பிரபாகரன்.

வழிகாட்டியாக அமையும் பட்டறிவிலிருந்து பாடம் கற்றுக் கொள்ளாதவன் மேம்படவோ, பிழைத்துக் கொள்ளவோ முடியாது.

பல்லாயிரம் மனித உயிர்களை சில நிமிடங்களில் காவு கொண்ட ஆழிப் பேரலை அனர்த்தத்தின் 21 ஆம் ஆண்டு நிறைவில் இன்று நிற்கின்றோம். 2004 ஆம் ஆண்டு இதே தினத்தில் ஏற்பட்ட சுனாமிப் பேரழிவில், இலங்கையில் 35,000 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். 5,000 க்கும் மேற்பட்டோர் காணாமல் போயினர். மேலும் பில்லியன் கணக்கான ரூபா மதிப்புள்ள சொத்துக்களும் அழிந்தன. பல்லாயிரம் பேர் வீடு வாசல்களை இழந்தனர். லட்சக் கணக்கானோர் ஏதிலியாகினர்.

2005 ஆம் ஆண்டு முதல் அந்த டிசம்பர் 26 ஆம் திகதியை ஒவ்வொரு ஆண்டும் ‘தேசிய பாதுகாப்பு தினம்’ என்று அறிவித்து, சுனாமி மற்றும் பிற பேரழிவுகளில் இறந்த அனைவரையும் பொதுமக்கள் பங்கேற்புடன் நினைவு கூருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆனால் இந்த ஆழிப்பேரலை ஏற்படுத்திய அனுபவங்களின் பாடங்களில் இருந்து - பட்டறிவிலிருந்து - உரியவற்றை நாம் கற்றுக் கொண்டோமா என்பதுதான் கேள்வி.

ஆழிப்பேரலை (சுனாமி) அனுபவத்திலிருந்து கிடைத்த பட்டறிவு நமக்கு இயற்கைச் சீற்றங்களின் கோரத்தன்மையையும், மனித வாழ்வின் நிலையற்ற தன்மையையும் உணர்த்தியமையோடு, மீண்டெழுதலின் வலிமையையும், எதிர்காலத் தயார் நிலையின் அவசியத்தையும் வலியுறுத்தி நின்றது. இது, பேரழிவில் ஏற்பட்ட இழப்புகளையும், சமூகங்களின் மீள்திறனையும், இயற்கையின் சீற்றங்களுக்கு எதிராக மனிதர்கள் ஒன்றிணைந்து போராடுவதற்கான பாடங்களையும் கூடக் கற்றுத் தந்தது.

ஆனால் நாம் அவற்றைக் கற்றுக் கொண்டோமா? உரிய முறையில் உள்வாங்கிக் கொண்டோமா என்பதுதான் கேள்வி.

அத்தகைய அழிவுகளை ஏற்படுத்தி ஆழிப் பேரலை அதன் மூலம் நமக்கு உணர்த்திய பாடங்களில் முக்கியமானது இயற்கையின் சீற்றத்தை எதிர்கொள்வதற்கான முன்னெச்சரிக்கை அவசியம் என்பதாகும்.

ஆழ்கடலில் ஏற்படக்கூடிய மோசமான நிலநடுக்கங்கள் மற்றும் அதனால் நேரக்கூடிய ஆழிப்பேரலை பற்றி நேரத்துடனே எதிர்வு கூறுவதோ முன்னெச்சரிக்கை விடுப்பதோ சாத்தியமற்றது. ஆயினும் ஆழ்கடலில் நிலநடுக்கங்கள் ஏற்பட்டதும், அதையொட்டி சுனாமிப் பேரலைகள் எழுந்து பெரும் அழிவுகளைத் தரும் என்ற எச்சரிக்கையைப் பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கு விரைந்து நாங்கள் வழங்க முடியும். அதற்கான முன்னெச்சரிக்கை தயார்படுத்தலோடு நாங்கள் இருக்க வேண்டும் என்ற பாடத்தை 21 ஆண்டுகளுக்கு முன்னர் நேர்ந்த ஆழிப் பேரலை பேரழிவு நமக்கு உணர்த்திச் சென்றுள்ளது.

ஆனால், அத்தகைய முன்னெச்சரிக்கைகளை இலங்கை தீவு முழுவதும் வசிக்கும் கரையோர மக்களுக்கு உரிய நேரத்தில் - குறுகிய கால அவகாசத்தில் வழங்கக்கூடியதான தயார்படுத்தலுடன் 24 மணி நேரமும் நாங்கள் கண் கொத்திப் பாம்பாக படு உஷாராக இருக்க வேண்டும். இந்தப் பாடத்தை அந்தச் சுனாமிப் பேரழிவு நமக்கு ஏற்படுத்திச் சென்றிருக்கின்றது.

ஆனால் நாட்டின் கரையோரப் பகுதிகளில் வாழும் மக்களை அந்த அளவுக்கு குறுகிய கால அவகாசத்தில் எச்சரிக்கை செய்து, உஷார் படுத்தி, அவர்கள் உயிரைப் பாதுகாக்க கூடிய செயற்பாட்டை நாம் இப்போது முன்னெடுத்து இருக்கின்றோமா என்பதை நம்மை நாமே கேட்டு உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

கரையோர மக்களை உஷார் படுத்தும் மிகத் துல்லியமான - மிகப் பயனுறுதி மிக்க - ஒரு திட்டம் நாட்டில் இருப்பதாகவே தெரியவில்லை.

ஆக, 21 ஆண்டுகளுக்கு முன்னர் ஆழிப்பேரரை நமக்கு கற்றுத் தந்த பாடத்தை நாம் இன்னமும் சரிவர கற்றுக் கொண்டு எதிர்வினை ஆற்றத் தயாராகவில்லை என்பதுதான் உண்மை நிலைவரம் ஆகும்.



# புத்தளத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இலங்கை ஐ.எஸ்.ஆர்.சி. நிறுவன உதவிகள்

**(கற்பிட்டி நிருபர் சியாஜ்)**

புத்தளம் மாவட்டத்தில் சமீபத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இலங்கையின் ஐ.எஸ்.ஆர்.சி (Islamic Relief Committee - ISRC) நிறுவனம் அத்தியாவசிய மனிதாபிமான நிவாரண உலர் உணவுப் பொருள்களை வழங்கும் நடவடிக்கை நேற்று வியாழக்கிழமை புத்தளத்தில் இடம்பெற்றது.

இந்தத் திட்டத்தின் கீழ், ஒவ்வொன்றும் ரூ. 12,000 மதிப்புள்ள 350 உலர் உணவுப் பொதிகள், புத்தளம் ஸாஹிரா தேசியக் கல்லூரி, காஸிமியா அரபுக் கல்லூரி மற்றும் கரைத்தீவு பெரிய பள்ளிவாசல் ஆகிய இடங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன. பேரழிவுக்குப் பிந்தைய மீட்பு காலத்தில், பலவீனமான குடும்பங்கள் எதிர்கொள்ளும் உடனடி உணவுத் தேவைகளை பூர்த்தி செய்து, அவர்கள் சந்திக்கும் சிரமங்களை குறைப்பதே இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

இந்த மனிதாபிமான முயற்சிக்கு குவைத் நாட்டைச் சேர்ந்த தனவந்தர்கள் வழங்கிய நிதி ஆதரவுடன், புன்யான் தொண்டு நிறுவனம் மற்றும் தன்மியா தொண்டு நிறுவனம் ஆகியவை துணை நின்றன. இது இலங்கையில் இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட சமூகங்களுடன் குவைத் நாட்டின் வலுவான சர்வதேச மனிதாபிமான ஒற்றுமையை வெளிப்படுத்துகிறது.

உலர் உணவுப் பொதிகள் விநியோகம், சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள், சமூகத் தலைவர்கள் மற்றும் உள்ளூர் நிறுவனங்களுடன் நெருங்கிய ஒருங்கிணைப்பில் மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம் வெளிப்படைத்தன்மை, சரியான பயனாளிகள் அடையாளம் காணுதல் மற்றும் தரைத்தள மட்டத்தில் திறமையான செயல்படுத்தல் ஆகியன உறுதி செய்யப்பட்டன.

ஐ.எஸ்.ஆர்.சி. பிரதிநிதிகள், பேரழிவுகளால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் மரியாதையை மீட்டெடுக்கவும், உடனடி நிவாரணத்தை வழங்கவும் நேரத்திற்குத் தக்க மனிதாபிமான உதவிகள் மிக முக்கியமானவை என்பதை வலியுறுத்தினர். மேலும், தொடர்ந்து வழங்கப்படும் உதவிகளுக்கும் மனிதாபிமான பணிகளுக்கான உறுதிப்பாட்டிற்கும் குவைத் தனவந்தர்கள் மற்றும் கூட்டாண்மை தொண்டு நிறுவனங்களுக்கு இலங்கை ஐ..எஸ். ஆர்.சி. தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தது.

எதிர்கால அவசர நிலைகளுக்கு திறம்பட பதிலளிக்கும் வகையில், பாதிப்புக்கு உள்ளாக்கப்படும் சமூகங்களுக்கு ஆதரவளிப்பதும், அரச நிறுவனங்கள் மற்றும் சர்வதேச தனவந்தர்களுடன் இணைந்து செயல்படும் கூட்டாண்மைகளை மேலும் வலுப்படுத்துவதும் தங்களின் உறுதியான இலக்காக இருப்பதாக இலங்கை ஐ.எஸ்.ஆர்.சி. உறுதி செய்துள்ளதுள்ளமையும் குறிப்பிடத்தக்கது










# மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் இருபதாவது ஆண்டு நினைவேந்தல்

மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் கிறிஸ்மஸ் ஆராதனையின்போது சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் 20ஆவது நினைவு தினம் மட்டக்களப்பில் அனுஷ்டிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாநகர சபை மண்டபத்தில் நேற்று மாலை தமிழரசுக்கட்சியின் வாலிப முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட தலைவர் க.சோபனன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. இதன்போது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலைக்கு நீதிவேண்டி அமைதியான முறையில் கவன ஈர்ப்பு ஊர்வலமொன்றும் நடத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மண்டபத்தில் ஜோசப் பரராஜசிங்கத்தின் திருவுருவப்படத்திற்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்ட இலங்கைத்தமிழ்அரசுக்கட்சியின்நாடாளுமன்ற உறுப்பினர்களான ஞா.சிறிநேசன், இ.சிறிநாத் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், உறுப்பினர்கள், கட்சியின் முக்கியஸ்தர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், மதத்தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் நினைவுப் பேருரையினை கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீட சட்டப் பேராசிரியர் அருளானந்தம் சர்வேஸ்வரன் வழங்கியிருந்தார்.

















# பஸ் டிப்பரும் நேருக்கு நேர் மோதி விபத்து 30 பேர் காயமடைந்து வைத்தியசாலையில்

**(உடப்பு க.மகாதேவன்)**

மாத்தறை திக்வெல்ல – பெலியத்த பிரதான வீதியில் ஹந்தபாங்கொடல்ல பிரதேசத்தில் டிப்பர் ரக வாகனம் ஒன்றும் பஸ் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

இந்த விபத்தினால் சுமார் 30 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வீரக்கெட்டிய பிரதேசத்திலிருந்து மாத்தறை நோக்கிப் பயணித்த தனியார் பஸ் ஒன்றும், மாத்தறையிலிருந்து பெலியத்த நோக்கிப் பயணித்த டிப்பர் ரக வாகனம் ஒன்றும் ஒன்றோடொன்று மோதியதிலேயே இந்த விபத்து நேர்ந்துள்ளது.

விபத்தின் போது டிப்பர் வாகனத்தின் சாரதி வாகனத்துக்கு சிக்கி பலத்த காயங்களுக்கு உள்ளானார். படுகாயமடைந்த சாரதியை அந்த பகுதி மக்கள் உடனடியாக மீட்டு சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்த்தனர். விபத்தினால் இரு வாகனங்களும் பலத்த சேதங்களுக்கு உள்ளாகியுள்ளன. விபத்து ஏற்பட்டவுடன் பஸ்ஸி சாரதி அவ்விடத்திலிருந்து தப்பியோடியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. தப்பியோடிய சாரதியை கைது செய்வதற்காக பொலிஸார் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பெலியத்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.









# ஆழிப்பேரலை அரிதானது... ஆபத்தானது...!

## ஆழிப்பேரலை இடம்பெற்று இன்றுடன் 21 ஆண்டுகள் நிறைவு பெறுகின்றன

இயற்கைக்கு இணையாக செயற்கை ஈடுகட்டி நிற்கிறது என்றாலும், சில நேரங்களில் ஏற்படும் இயற்கை பேரழிவுகளை எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாததை நாம் காண நேரிடுகிறது. அது போல்தான் ஆழிப்பேரலை என்று அழைக்கப்படும் சுனாமியும்.

ஆழிப்பேரலை என்பது சுனாமி. சுனாமி என்பது ஜப்பானிய மொழிச் சொல். 'சு' என்றால் துறைமுகம் என்றும், 'னாமி' என்றால் அலை என்றும் பொருள் கொள்ளப்படுகிறது. எனவே, சுனாமி என்ற சொல்லுக்கு 'துறைமுக அலை' என்று பொருள்.

நாம் வாழுகின்ற பூமியில் 70 சதவீத நிலப்பரப்பு கடலுக்கு அடியில் உள்ளது. பூமி முழுவதையும் நிலம் மற்றும் கடலுக்கு அடியில் உள்ள 12 பாறைத் தட்டுகள் தாங்கிப் பிடித்துக் கொண்டுள்ளன. இந்தத் தட்டுகள் ஒன்றையொன்று மோதிக் கொண்டாலோ அல்லது இருக்கின்ற இடத்திலிருந்து நகர்ந்தாலோ பூகம்பங்கள் உருவாகின்றன. தட்டுகள் நேருக்கு நேர் ஒன்றையோன்று மோதிக்கொள்ளும் பொழுது ஒன்று கீழேயும் மற்றொன்று மேலேயுமாக தள்ளப்படுகிறது. இரண்டுமே மோதிக்கொள்ளும் வேகத்தைப் பொறுத்து ஏற்படும் இடைவெளியில் இருந்து கிளம்பும் அழுத்தமும், வெப்பமும் மேல் நோக்கி ஆவேசமாக வெளி வருகிறது. இதன் வேகத்தின் அளவைப் பொறுத்தே கடல் மற்றும் நிலப்பரப்பு ஆகியவற்றில் நடுக்கம் ஏற்படுகிறது. கடலுக்கு அடியில் ஏற்படும் இந்த பூகம்பம் கடலின் மேற்பரப்புக்கு வரும்பொழுது ராட்சத அலைகளை உண்டாக்குகிறது.

நில அதிர்வுக்கு தக்கவாறு கடல் அலைகளின் வீரியம் இருக்கும். ரிக்டர் அளவுகோளில் ஐந்துக்கு குறைவாக இருந்தால் எந்த பாதிப்பும் தெரியாது. ஐந்து முதல் ஏழுவரை ஓரளவுக்கு பாதிப்புகள் இருக்கும். 7.5 இற்கு மேல் இருக்கும் பொழுதுதான் சுனாமி அலைகள் தோன்றும். ஆழிப்பேரலை சாதாரண நேரங்களில் எழும்பும் அலைகளைப் போல் அல்லாமல் மிக அதிக உயரமாகவும் மணிக்கு 800 முதல் 1000 கிலோ மீற்றர் வேகத்திலும் இவ்வலைகள் நிலப்பகுதிக்குள் நுழையும்பொழுது நிலநடுக்கம் ஏற்படுத்தும் பாதிப்புகளைக் காட்டிலும் மிக மிக அதிகமான அளவு பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன.

கி.மு. 326 இல் சிந்து சமவெளி கட்ச் வளைக்குடா பகுதி போன்றவற்றில் சுனாமி ஏற்பட்டிருக்கிறது. 1650 இல் கிரேக்கத்தில் ஏற்பட்ட சுனாமிக்குப் பிறகு 1775, 1883, 1893, 1896 என்று இடைவெளி குறைந்து ஏற்பட்டு இருந்திருக்கிறது. இந்த காலகட்டத்தில் ஸ்பெயின், போர்ச்சுக்கல், வட ஆப்பிரிக்கா, இந்தோனேசியா, ஜாவா, ஜப்பான், போன்ற நாடுகளில் சுனாமி ஏற்பட்டிருக்கிறது. இருப்பினும், அமெரிக்காவில் உள்ள ஹவாயில் கி.பி. 1946 இல் ஏற்பட்டுள்ளது. இந்த சுனாமிதான் பேரழிவைக் கொடுத்திருக்கிறது. ரஷ்யாவிலும் சுனாமி தாக்கியிருக்கிறது. கி.பி. 1883 இல் இந்தோனேசியாவில் உருவாகிச் சென்னையைத் தாக்கியிருக்கிறது. 1945 இல் பாகிஸ்தானின் கராச்சி பகுதிகளில் உருவாகி இந்தியாவின் கட்ச் பகுதியை தாக்கி இருக்கிறது.

அதன் பிறகு 2004 டிசெம்பர் 26 அன்று உண்டான சுனாமியால் சுமத்திரா தீவு (இந்தியத் தட்டும் மியான்மர் தட்டும் கடலுக்கு அடியில் மோதிக்கொண்டதால் ஏற்பட்டது) இந்தோனேசியா, தாய்லாந்து, இந்தியா, இலங்கை, சோமாலியா, மலேசியா போன்ற நாடுகள்

தொடர்ச்சி ▼



# ஆழிப்பேரலை அரிதானது... ஆபத்தானது...!

தொடர்ச்சி ▲

பாதிக்கப்பட்டன.

இந்தியாவில் தமிழ்நாடு, பாண்டிச்சேரி மற்றும் அந்தமான், நிக்கோபார் தீவுகளின் கடற்கரைப் பகுதிகள் முழுவதுமாகவும் ஆந்திராவின் தெற்கு பகுதியையும் கேரளா, கர்நாடகா மாநிலங்களின் சில பகுதிகளையும் சுனாமி கடுமையாகத் தாக்கியது. இதுதான் பெருமளவில் சுனாமி தாக்கத்தை ஏற்படுத்தியது. இது சமீபத்தியதாகவும் அதிக மக்களை பலி கொண்டதாகவும் இருப்பதால் எல்லோருடைய மனதிலும் பதிந்த சோக சுவடுகள் இன்றும் மறையாமலேயே இருக்கின்றன.

ஆக, எல்லாவற்றையும் கூட்டிக் கழித்துக் கணக்குப் பார்த்தால் சுனாமி என்பது பூமிக்குப் புதியவை அல்ல எனத் தெரிய வருகிறது. விலங்குகள், பறவை இனங்கள் மற்றும் நீர்வாழ் உயிரினங்கள் போன்றவற்றின் செயல்கள் வித்தியாசமாகத் தென்பட்டால் இது போன்ற பேரழிவுகள் ஏற்படுவதற்கு வாய்ப்பு இருப்பதாகக் கூறுகிறார்கள்.

டிசெம்பர் 26 ஆம் நாளென்றவுடன், இந்தியப் பெருங்கடல் பகுதியில், இந்தோனேசியாவின் சுமத்ரா தீவுக்கு அருகில் ஏற்பட்ட மிகவும் சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தால் உருவான சுனாமி எனும் ஆழிப் பேரலையும், அதனால் ஏற்பட்ட பேரழிவுகளுமே நினைவுக்கு வரும். 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் 26 அன்று ஏற்பட்ட சுனாமியால் 2,30,000 பேர்கள் உயிரிழந்தனர். இந்தியா, இலங்கை, இந்தோனேசியா உள்ளிட்ட கடலோரப்பகுதிகளில் இருந்த 14 நாடுகளில் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டன. இருபத்தொன்றாம் நூற்றாண்டின் மிகப்பெரும் பேரழிவை ஏற்படுத்தியது இந்த ஆழிப்பேரலைதான்.

கடல் படுகையில் திடீரென ஏற்படும் மாற்றதால் மேலிருக்கும் தண்ணீர் செங்குத்தாக இடமாற்றம் அடைவதால் சுனாமி உருவாகும். டெக்டானிக் நில நடுக்கங்கள், பூமியின் புவி ஓடு உருக்குலைவதால் உண்டாகும், இது கடலுக்கு அடியில் ஏற்படும் போது, சிதைக்கப்பட்ட பகுதியிலுள்ள தண்ணீர், சமநிலையில் இருந்து இடம் பெயர்கிறது. டெக்டானிக் தட்டுகளின் தவறான சுழற்சி காரணமாக, செங்குத்தாக நீர் இடப்பெயர்ச்சி செய்யப்படுகிறது. இயக்கத்தில் ஏற்படும் சாதாரண தவறுகளாலும் கடல் படுகையில் இடப்பெயர்ச்சி ஏற்படும். ஆனாலும், இவை பெரிய சுனாமியை உண்டாக்குவது இல்லை.

1946 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அலாசுகாவில் அலேடன் தீவுகளுக்கு அருகில் 7.8 ரிக்டர் அளவுகள் பூகம்பம் ஏற்பட்டது. இதனால் 14 மீட்டர் உயரத்திற்கு அலை மேலே எழுந்து ஹவாய் தீவில் உள்ள இலோ என்ற இடத்தையே அழித்து விட்டது. பசிபிக் பெருங்கடல் தரையில் அலாசுகா கீழ்நோக்கித் தள்ளப்பட்டதால், உண்டான பூகம்பமே இதற்குக் காரணம்.

சுனாமி என்பது அரிதான நிகழ்வுதான் எனினும், மிகவும் ஆபத்தானது என்பதால், ஜப்பான் தனது கசப்பான அனுபவத்தின் காரணமாக, சுனாமி முன்னெச்சரிக்கை, பொது நடவடிக்கை மற்றும் எதிர்கால பாதிப்புகளைக் குறைப்பதற்காக பேரழிவுக்குப் பின்னர் சிறப்பாகத் திரும்புதல் போன்ற துறைகளில் பெரும் நிபுணத்துவத்தை ஏற்படுத்துவதற்கு, ‘உலக சுனாமி விழிப்புணர்வு நாள்’ ஏற்படுத்த வேண்டுமென்கிற கோரிக்கையை முன் வைத்தது. அதனைத் தொடர்ந்து, 2015 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் அவையின் கூட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 5 ஆம் நாளில், ‘உலக சுனாமி விழிப்புணர்வு நாள்’ கடைப்பிடிக்க வேண்டுமென்று அறிவித்தது. அதனைத் தொடர்ந்து, ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 5 ஆம் நாளில் ‘உலக சுனாமி விழிப்புணர்வு நாள்’ கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

அனைத்து நாடுகளும், பன்னாட்டு அமைப்புகளும், சமூக அமைப்புகளும் இந்நாளில், சுனாமி குறித்த விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதுடன், சுனாமியினால் விளையும் அபாயத்தைக் குறைப்பதற்கான புதுமையான அணுகுமுறைகளைப் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தது. குறிப்பாக, வேகமான நகரமயமாக்கல் மற்றும் சுனாமி பாதிப்புக்குள்ளான பகுதிகளில் வளர்ந்துவரும் சுற்றுலா போன்றவைகளைக் கட்டுப்படுத்தி, பெருந்தீங்குகளைக் குறைத்திட வேண்டும். மேலும், பேரழிவுகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# தெற்கு கடலில் போதைப்பொருளுடன் கைதான 5 பேரை தடுத்து வைத்து விசாரிக்க நடவடிக்கை

நாட்டின் தெற்கு கடற்பரப்பில் போதைப் பொருட்களுடன் கைது செய்யப்பட்ட 05 சந்தேகநபர்களையும் தடுத்து வைத்து விசாரணை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடற்படையினரால் கைப்பற்றட்ட மீன்பிடி படகு திக்கோவிட்ட துறைமுகத்திற்கு நேற்று முன்தினம் கொண்டுவரப்பட்டது.

இந்த படகிலிருந்த 05 பேர் கைது செய்யப்பட்டனர்.

தினுக புத்தா என்ற குறித்த மீன்படி கப்பல் கந்தரயிலிருந்து கடந்த மாதம் 09 ஆம் திகதி கடலுக்கு சென்றுள்ளது.

கரைக்கு கொண்டுவரப்பட்ட படகை சோதனைக்குட்படுத்திய போது 170 போதைப்பொருள் பொதிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் தெவுந்தர பகுதியை சேர்ந்தவர்கள் எனவும் படகின் உரிமையாளர் சிலாபம் பகுதியை சேர்ந்தவர் என்பதும் வெளிக்கொணரப்பட்டுள்ளது.

# இலங்கையில் ஒரே ஆண்டில் 2,341 துப்பாக்கிகள் பறிமுதல்



2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் இதுவரையான காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் ஊடாக 2,341 துப்பாக்கிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவற்றில் ரி 56 ரக துப்பாக்கி கள் 73, 59 கைத்துப்பாக்கிகளும், இரண்டாயிரத்து 126 ஏனைய வகை துப்பாக்கிகளும் அடங்குகின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் ஆயிரத்து 793 கிலோகிராமுக்கும் அதிகளவான ஹெரோயின், மூவாயிரத்து 683 கிலோகிராமுக்கு அதிகளவான ஐஸ் போதைப்பொருள் மற்றும் 16,686 கிலோகிராமுக்கு அதிகளவான கஞ்சா என்பனவும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என பொலிஸ் குறிப்பிட்டுள்ளது.



# மீண்டும் திறக்கப்பட்டது ஹக்கல தாவரவியல் பூங்கா

"டித்வா" சூறாவளி காரணமாக ஏற்பட்ட அனர்த்த நிலைமையால் தற்காலிகமாக மூடப்பட்டிருந்த ஹக்கல தேசிய தாவரவியல் பூங்கா, நேற்று முதல் சுற்றுலாப் பயணிகளுக்காக மீண்டும் திறக்கப்பட்டுள்ளதாக சுற்றாடல் அமைச்சு தெரிவித்துள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் வழங்கிய பரிந்துரைகள் மற்றும் அறிவுறுத்தல்களுக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மண்சரிவு அபாயம் அவதானிக்கப்பட்ட நுழைவாயிலுக்கு அருகிலுள்ள குளம் மற்றும் வனப் பூங்காவிற்குச் செல்லும் பாதைகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

சுற்றுலாப் பயணிகள் தடைசெய்யப்பட்ட பகுதிகளுக்குள் நுழைவதைத் தவிர்க்க எச்சரிக்கை பலகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பு மற்றும் வசதியைக் கருத்திற்கொண்டு, பூங்கா ஊழியர்களால் விசேட உதவித் திட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மிகக்குறுகிய காலப்பகுதிக்குள் பூங்காவைச் சீரமைத்து மீண்டும் மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவந்துள்ளதாக சுற்றாடல் அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது.

# பண்டிகைக் காலத்தில் மின்சாரப் பயன்பாட்டில் அதீத எச்சரிக்கையுடன் இருக்குமாறு கோரிக்கை

நத்தார் மற்றும் புத்தாண்டுப் பண்டிகைக் காலங்களில் மின்சாரம் தாக்கும் அபாயம் அதிகரித்துள்ளதால், பொது மக்கள் மின்சாரப் பயன்பாட்டில் அதீத எச்சரிக்கையுடன் இருக்குமாறு இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் பண்டிகைக் காலங்களில் தரமற்ற மின்சார அலங்கார விளக்குகள் மற்றும் மின் உபகரணங்களால் கணிசமான எண்ணிக்கையிலான உயிரிழப்புகளும் காயங்களும் ஏற்படுவதாக ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

பாதுகாப்பான இடமாகக் கருதப்படும் வீடுகளிலேயே, பாதுகாப்பு விதிமுறைகளை மீறுவதால் இத்தகைய விபத்துக்கள் நேரிடுவதாக அதிகாரிகள் எச்சரித்துள்ளனர். "எஸ்.எல்.எஸ்" தரச் சான்றிதழ் பெற்ற மின் சாதனங்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

குறிப்பாக, 13A Type-G ரக சதுர ஊசி செருகிகளை கொண்ட அலங்கார விளக்குகளையே கொள்வனவு செய்ய வேண்டும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

விளக்குகளைப் பயன்படுத்துவதற்கு முன்பு, அவற்றில் வெட்டுப்பட்ட கம்பிகள், தளர்வான இணைப்புகள் அல்லது சேதமடைந்த மின்காப்பு உறைகள் உள்ளனவா என்பதைச் சரிபார்க்க வேண்டும். நீடிப்பு மின்வடம் அளவுக்கு அதிகமான மின் சாதனங்களை இணைப்பதைத் தவிர்க்க வேண்டும்.

அத்துடன், மழை மற்றும் ஈரப்பதம் காரணமாக மின்சாரம் தாக்கும் அபாயம் அதிகம் என்பதால், வெளிப்புற அலங்காரங்களுக்கு அதற்கென பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட மழைத்தூறலைத் தாங்கக்கூடிய விளக்குகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

செருகிகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பெட்டிகள் ஈரம் படாதவாறு வீட்டிற்குள் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

அலங்கார விளக்குகளை திரைச்சீலைகள், காகித அலங்காரங்கள் அல்லது எளிதில் தீப்பற்றக்கூடிய பொருட்களுக்கு அருகில் வைக்க வேண்டாம் என்றும், உற்பத்தியாளரின் அறிவுறுத்தலுக்கு மாறாக பல விளக்குத் தொகுதிகளை ஒன்றாக இணைக்க வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மின்சாரம் இணைக்கப்பட்டிருக்கும் போது மின்விளக்குகளை மாற்றுவதோ அல்லது பழுதடைந்த விளக்குத் தொடர்களைத் தாமாகவே பழுதுபார்க்க முயல்வதோ ஆபத்தாக முடியும்.

எனவே, பாதுகாப்பான முறையில் பண்டிகையைக் கொண்டாட இந்த வழிகாட்டல்களைப் பின்பற்றுமாறு அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

ஏதேனும் அசம்பாவிதங்கள் நேர்ந்தால் உடனடியாக அருகில் உள்ள காவல்துறை நிலையத்திற்கோ அல்லது மின்சார சபையினருக்கோ அறிவிக்குமாறு கோரப்பட்டுள்ளனர்.



# மருந்துத் தரப் பரிசோதனைகளை விரிவுபடுத்தும் சுகாதார அமைச்சு

மருந்துகளின் தரத்தைப் பேணுவதற்கும், தரப் பரிசோதனை செயற்பாடுகளை விரைவுபடுத்துவதற்கும் ஏனைய அரச நிறுவனங்களின் ஆய்வக வசதிகளைப் பயன்படுத்த சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

சுகாதார அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் இத்தீர்மானம் எட்டப்பட்டது.

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் ஆய்வகத்தில் மட்டும் பரிசோதனைகளை மேற்கொள்வதில் உள்ள சிக்கல்களைத் தீர்க்க இலங்கை நானோ தொழில்நுட்ப நிறுவனம், இலங்கை உயிரியல் தொழில்நுட்ப நிறுவனம், கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம், கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம், தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை மற்றும் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் ஆகிய நிறுவனங்களின் ஆய்வக ஒத்துழைப்பைப் பெற முடிவு செய்யப்பட்டது.

அத்துடன், சந்தையில் சந்தேகத்திற்குரியதாகக் கருதப்படும் மருந்துப் பொருள்களின் தரப் பரிசோதனைகளுக்கு முதலிடம் வழங்க அமைச்சர் அறிவுறுத்தினார்.

மேலும் தரப் பரிசோதனைகள் காரணமாக மருந்து விநியோக சங்கிலியில் எவ்வித பாதிப்பும் ஏற்படாதவாறு நடவடிக்கைகள் அமைய வேண்டும் எனவும் பல்வேறு நிறுவனங்களுக்கு இடையே முறையான ஒருங்கிணைப்பை ஏற்படுத்தி, தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைக்கு சமர்ப்பிக்கப்படும் தர அறிக்கைகளில் உள்ள சிக்கல்களைத் தீர்க்க வேண்டும் என்றும் அமைச்சர் அறிவுறுத்தியுள்ளார்.

இச்சந்திப்பில் சுகாதார பிரதி அமைச்சர் ஹன்சக விஜேமுனி, அமைச்சின் செயலாளர் விசேட மருத்துவ நிபுணர் அனில் ஜாசிங்க உள்ளிட்ட முக்கிய அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

# பொலிஸாரை கருவியாக பயன்படுத்தி ஊடகங்களை அச்சுறுத்தும் அரசாங்கம்

## சஜித் பிரேமதாஸ கண்டனம்



தற்போதைய அரசாங்கம் கருத்துச் சுதந்திரத்திற்கு முட்டுக்கட்டை இட்டு, நாட்டை ஒரு சர்வாதிகார ஆட்சியை நோக்கி கொண்டு செல்ல முயற்சிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சாட்டியுள்ளார்.

ஊடக சுதந்திரம் மீதான அரசாங்கத்தின் அழுத்தம் தொடர்பில் நேற்று விசேட அறிவிப்பொன்றை வெளியிட்டு அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஒரு ஜனநாயக நாட்டின் நான்கு முக்கிய தூண்களாக சட்டவாக்கம், நிறைவேற்றுஅதிகாரம்,நீதித்துறைமற்றும்ஊடகம்ஆகியவைவிளங்குகின்றன.ஆனால், தற்போதைய அரசாங்கம் பொலிஸை கருவியாகப் பயன்படுத்தி, மக்களின் ஜனநாயக உரிமைகளையும், பொலிஸில் பணிபுரியும் அதிகாரிகளின் உரிமைகளையும் மீறி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் உண்மையான தகவல்களை அறிந்துகொள்ளும் மக்களின் உரிமையைப் பறித்து, ஒரு “பொலிஸ் அரசை” உருவாக்க அரசாங்கம் முயல்கிறது.

சுதந்திர ஊடகங்கள் தங்களின் கருத்துக்களை ஆதாரங்களுடன் முன்வைத்தாலும், அதைத் தடுத்து ஊடகங்களை ஒடுக்க பொலிஸை பயன்படுத்துவது ஜனநாயகத்திற்கு எதிரானது என சஜித் பிரேமதாஸ சாடியுள்ளார்.

மக்களின் ஆணை சர்வாதிகாரத்திற்கானது அல்ல் மக்களின் அமைதியான பெரும்பான்மையினரின் குரலாக சுதந்திர ஊடகங்கள் விளங்குகின்றன.

அவற்றை ஒடுக்குவது என்பது சர்வாதிகார ஆட்சிக்கு வழிவகுக்கும் செயலாகும். மக்கள் இந்த அரசாங்கத்துக்கு வழங்கிய ஆணை, சர்வாதிகாரத்தை நிலைநாட்டவோ அல்லது ஒரு “பொலிஸ் அரசை“ உருவாக்கவோ வழங்கப்பட்டது அல்ல என்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

அரசாங்கம் பொலிஸின் சுதந்திரமான செயல்பாடுகளில் தலையிடுவதால், அதிகாரிகளால் நடுநிலையாகப் பணியாற்ற முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

அரசியல் தலையீடுகள் இன்றி பணியாற்றும் உரிமை பொலிஸாருக்கு மறுக்கப்படுவதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

உண்மைத் தகவல்களை வெளிப்படுத்தும் ஊடகங்களின் உரிமை பறிக்கப்படுவது 220 லட்சம் மக்களின் உரிமையை மீறுவதற்குச் சமமாகும்.

தற்போது உள்ளூராட்சி மன்றங்களின் பாதீட்டு வாக்கெடுப்புகளிலும் அரசாங்கத்தின் சர்வாதிகாரத் தலையீடுகள் காணப்படுவதாகவும், குறிப்பாக நீர்கொழும்பு மற்றும் ஹொரண ஆகிய பகுதிகளில் இத்தகைய சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# 1000 கோடி ரூபா நட்டஈடு கோரி சுனில் வட்டகல வழக்கு தாக்கல்



பொது மக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் செயற்பாட்டாளரான மஹிந்த பத்திரனவுக்கு எதிராக கடுவலை மாவட்ட நீதிமன்றத்தில் அவதூறு வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

தனது நற்பெயருக்குக் களங்கம் விளைவித்ததாகக் கூறி, இதற்காக 1000 கோடி ரூபா நட்டஈடு வழங்குமாறு பிரதி அமைச்சர் இந்த வழக்கின் மூலம் கோரியுள்ளார்.

கடந்த செப்டம்பர் மாதம் மஹிந்த பத்திரன தனது பேஸ்புக் பக்கத்தில் வெளியிட்ட பதிவு ஒன்றே இந்த சட்ட நடவடிக்கைக்குக் காரணமாகும்.

அந்தப் பதிவில், கொழும்பு சினமன் லைஃப் சொகுசு குடியிருப்பு வளாகத்தில் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல ஒரு சொகுசு அடுக்குமாடி குடியிருப்பை வாங்கியுள்ளார்.

இந்தச் சொத்து வாங்குவதற்கான நிதி ஆதாரம் சந்தேகத்திற்குரியது என்றும், இது கையூட்டு மூலம் பெறப்பட்ட பணமாக இருக்கலாம் என்றும் அவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டுகள் முற்றிலும் பொய்யானவை மற்றும் அடிப்படை ஆதாரமற்றவை என சுனில் வட்டகல நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

தனது அரசியல் வாழ்க்கையையும் தனிப்பட்ட கௌரவத்தையும் சீர்குலைக்கும் நோக்கில் திட்டமிட்டே இந்தப் பொய்ப் பிரசாரம் செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சச்சின் ரத்வத்த என்ற பெயரிலான ஒரு பேஸ்புக் கணக்கை மேற்கோள் காட்டியே மஹிந்த பத்திரன இந்தப் பதிவை இட்டுள்ளார்.

அந்தக் கணக்கின் நம்பகத்தன்மையும் தற்போது கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக ஏற்கனவே மஹிந்த பத்திரனவுக்கு கோரிக்கை கடிதம் அனுப்பப்பட்டதாகவும், ஆனால் அதற்கு அவர் எவ்வித பதிலும் வழங்கவில்லை என்றும் பிரதி அமைச்சர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் பிரதி அமைச்சராகப் பதவியேற்ற சுனில் வட்டகல, சட்டத்தரணியாகவும் செயற்பட்டு வருகின்றார்.

சமூக ஊடகங்கள் வாயிலாகப் பரப்பப்பட்ட இந்தத் தகவல், தனது பொது நற்பெயருக்குப் பாரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக அவர் தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

# இலங்கை - இந்திய உறவில் புதிய மைல்கல்: வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் கருத்து



இந்தியாவின் அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை என்ற கொள்கையை இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ் ஜெய்சங்கர் எடுத்துரைத்துள்ளார்.

இலங்கைக்குக் கடந்த திங்கள் கிழமை விஜயம் செய்திருந்த அவர், நாட்டின் உயர் மட்ட பிரமுகர்களை சந்தித்தப்பின்னர் இந்தியாவுக்குத் திரும்பினார்.

இந்த விஜயம் தொடர்பில் எக்ஸ் தள பதிவில் கருத்துக்களை பகிர்ந்துகொண்ட எஸ் ஜெய்சங்கர், இலங்கைக்கான முன்னுரிமை தொடர்பில் தெளிவுபடுத்தியுள்ளார்.

அதில் டிட்வா சூறாவளியால் ஏற்பட்ட பேரழிவிற்குப் பின்னர் இலங்கையை மீண்டும் கட்டியெழுப்புவதில் இந்தியாவின் ஆதரவை மீண்டும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வை மஹாசாகர் திட்டத்தின் கீழ், சூறாவளியால் பெரும் பேரழிவில் சிக்கிய இலங்கைக்கு உதவ ஒபரேஷன் சாகர் பந்து ஆரம்பிக்கப்பட்டதாக ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

மது இலங்கை பயணத்தின் போது, டிட்வா சூறாவளிக்குப் பிறகு மறுகட்டமைப்பு மற்றும் மறுவாழ்வுக்கான இந்தியாவின் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தியதாகவும் அவர் தனது பதிவில் தெரிவித்துள்ளார்.

# சிறுபான்மையினர் உரிமைகளுக்கு முழுமையான பாதுகாப்பு தேவை

## த.வெ.க. அறிவிப்பு



"இந்திய அரசமைப்புக்கு எதிராக தேவாலயங்கள், கிறிஸ்தவ மக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கும் கடும் கண்டனம். சிறுபான்மையின மக்களின் வழிபாட்டுத் தலங்களுக்கும், அவர்களின் அடிப்படை உரிமைகளுக்கும் முழுமையான பாதுகாப்பை வழங்க அரசு முன்வர வேண்டும்."

– இவ்வாறு த.வெ.க. செய்தி தொடர்பாளர் ராஜ்மோகன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

"அரசியல் ஆதாயத்துக்காக மக்களிடையே பிரிவினையை உண்டாக்கும் பிளவுவாத பாசிச சக்திகளை மக்கள் முற்றாகப் புறக்கணிக்க வேண்டும்.

இந்தியாவின் ஆன்மாவாக விளங்கும் மதச்சார்பின்மையைக் கேள்விக்குறியாக்கும் வகையில், புனிதமான கிறிஸ்துமஸ் பண்டிகைக் காலத்தில் நாட்டின் தலைநகர் டில்லி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில், கிறிஸ்துவ மக்கள் மற்றும் தேவாலயங்கள் மீது பிளவுவாத சக்திகளால் நிகழ்த்தப்பட்டுள்ள மத நல்லிணக்கச் சீர்குலைவுச் சம்பவங்கள் மிகுந்த வேதனையும் அதிர்ச்சியும் அளிக்கின்றன.

நமது நாடு அனைத்து மதத்தினரும் சகோதரத்துவத்துடன் வாழும் ஒரு புண்ணிய பூமி. அன்பையும் சமாதானத்தையும் போதிக்கும் கிறிஸ்துமஸ் நன்னாளில், வழிபாட்டுத் தலங்களிலும் பொது இடங்களிலும் அத்துமீறி நுழைந்து, வன்முறை அணுகுமுறைகளைக் கையாண்டு அச்சுறுத்துவது எவ்விதத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாதது. இத்தகைய செயல்கள் இந்திய அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ள வழிபாட்டுச் சுதந்திரத்திற்கு எதிரானது மட்டுமல்லாமல், ஒட்டுமொத்த ஜனநாயகத்தின் மீதான தாக்குதலாகும்.

எனவே, இத்தகைய தாக்குதல்களில் ஈடுபட்ட சமூக விரோதிகளை உடனடியாக அடையாளம் கண்டு, அவர்கள் மீது சட்டப்படி பாரபட்சமின்றி கடுமையான நடவடிக்கைகளை ஒன்றிய மற்றும் அந்தந்த மாநில அரசுகள் எடுக்க வேண்டும். சிறுபான்மையின மக்களின் வழிபாட்டுத் தலங்களுக்கும், அவர்களின் அடிப்படை உரிமைகளுக்கும் முழுமையான பாதுகாப்பை வழங்க அரசு முன்வர வேண்டும். அரசியலமைப்புக்கு எதிராகக் கிறிஸ்தவ மக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்குக் கடும் கண்டனம்.

மதம் கடந்த மனிதநேயமே வலிமையான தேசத்தை உருவாக்கும். தமிழக வெற்றிக் கழகம் எப்போதும் மதச்சார்பின்மைக்கும் சமூக நீதிக்கும் உறுதுணையாக நிற்கும். பிளவுவாத அரசியலை முறியடித்து, மீண்டும் அமைதியும் சகோதரத்துவமும் தழைக்க அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம்." என்று குறிப்பிட்டுள்ளார்.

# சிறுபான்மையினருக்கு துணையிருப்பதில்தான் பெரும்பான்மையினரின் பலம் இருக்கின்றது

## தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவிப்பு



சிறுபான்மையினர் அச்சமின்றி வாழத் துணையிருப்பதில்தான் பெரும்பான்மையினரின் பலமும் இருக்கிறது குணமும் இருக்கிறது என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

"சிறுபான்மையினர் அச்சமின்றி வாழத் துணையிருப்பதில்தான் பெரும்பான்மையினரின் பலமும் இருக்கிறது. குணமும் இருக்கிறது. பெரும்பான்மை என்ற பெயரில் சில வலதுசாரி வன்முறைக் கும்பல்கள் தாக்குதல்களிலும், கலவரங்களிலும் ஈடுபடுவது, அதுவும் – பிரதமர் கிறிஸ்துமஸ் விழாவில் பங்கெடுக்கும்போதே ஈடுபடுவது, நாட்டு மக்களுக்குத் தவறான செய்தியையே கொண்டு சேர்க்கும்.

மணிப்பூர்கலவரங்களைத்தொடர்ந்து, இப்போது ஜபல்பூர் – ராய்ப்பூர் மற்றும் பிற இடங்களிலும் சிறுபான்மையினர் மீது தாக்குதல் என்பதை நல்லிணக்கத்தை விரும்பும் நாட்டு மக்கள் எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

ஒன்றிய பா.ஜ.க. அரசு பொறுப்பேற்ற பிறகு, சிறுபான்மையினருக்கு எதிரான வெறுப்புப் பேச்சுகள் 74 வீதம் அதிகரித்திருப்பதாகச் சொல்லப்படும் புள்ளிவிவரங்கள், எதிர்காலம் எதிர்நோக்கியுள்ள ஆபத்துகளை உணர்த்துகிறது. எனவே, நாட்டுமக்களைப் பிளவுபடுத்திக் குளிர்காய நினைக்கும் கலவரக் கும்பல்களை இரும்புக்கரம் கொண்டு அடக்கிட வேண்டியது நம் அனைவரது பொறுப்பும் கடமையுமாகும்." என குறிப்பிட்டுள்ளார்.




# துருக்கியில் பாரிய தாக்குதல் சதி முறியடிப்பு: ஐ.எஸ். உடன் தொடர்புடைய 115 பேர் கைது

துருக்கியில் கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு கொண்டாட்டங்களின் போது தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்தனர் என கருதப்படும் ஐ.எஸ். பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடைய 100 இற்கும் மேற்பட்டோரை அந்நாட்டுப் பாதுகாப்புப் படையினர் அதிரடியாகக் கைது செய்துள்ளனர்.

இஸ்தான்புல் முழுவதும் 124 இடங்களில் மேற்கொள்ளப்பட்ட பாரிய சுற்றிவளைப்புத் தேடுதல்களின் போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என இஸ்தான்புல் நகர பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்களிடமிருந்து துப்பாக்கிகள், தோட்டாக்கள் மற்றும் முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

குறிப்பாக, கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு காலங்களில் தாக்குதல் நடத்த இவர்கள் திட்டமிட்டிருந்தமை விசாரணையில் தெரியவந்துள்ளது.

தப்பியோடிய எஞ்சிய 22 பேரைத் தேடும் பணிகளில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

கைது செய்யப்பட்டவர்கள் துருக்கிக்கு வெளியேயுள்ள ஐ.எஸ். முகவர்களுடன் நேரடித் தொடர்பில் இருந்தனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இரண்டு நாள்களுக்கு முன்பு, ஆப்கானிஸ்தான் – பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் துருக்கிய உளவு அமைப்பினர் நடத்திய தேடுதலில், ஐ.எஸ். அமைப்பின் சிரேஷ்ட தலைவர் ஒருவரைத் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தியிருந்தனர்.

அவர் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தத் திட்டமிட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. துருக்கியானது சிரியாவுடன் 900 கிலோ மீற்றர் எல்லையைப் பகிர்ந்து கொள்கிறது.

சிரியாவின் தற்போதைய ஜனாதிபதி அஹ்மத் அல்–ஷாரா, ஐ.எஸ். பயங்கரவாதத்தின் எஞ்சிய பகுதிகளை அழிப்பதற்கு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுடன் இணைந்து பணியாற்றுவதாக உறுதியளித்துள்ளார்.

கடந்த சில நாள்களுக்கு முன்பு சிரியாவில் மூன்று அமெரிக்கர்கள் கொல்லப்பட்டதற்குப் பதிலடியாக, அமெரிக்கா சிரியாவிலுள்ள ஐ.எஸ். நிலைகள் மீது 70 இற்கும் மேற்பட்ட ஏவுகணைகளை வீசி பாரிய தாக்குதலை நடத்தியுள்ளது.

ஐ.எஸ். அமைப்பின் மீள் எழுச்சியைத் தடுக்க துருக்கி மற்றும் சிரிய அரசாங்கங்கள் பாதுகாப்பு ஒத்துழைப்பை அதிகரித்து வருகின்றன.

பண்டிகைக் காலத்தில் இவ்வாறான அச்சுறுத்தல்கள் நிலவுவதால் துருக்கி முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன், பொலிஸார் மற்றும் உளவுத்துறையினர் தொடர் கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.








# காசா மக்கள் தொடர்பில் திருத்தந்தை கடும் கவலை; உக்ரைன் போர் குறித்து உருக்கமான வேண்டுகோள்



உக்ரைன் மற்றும் ரஷ்யா ஆகிய இரு நாடுகளும் போரை முடிவுக்குக் கொண்டுவர “துணிச்சலுடன்“ நேரடிப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வேண்டும் என திருத்தந்தை 14 ஆம் லியோ வலியுறுத்தினார்.

வத்திக்கான் புனித பேதுரு சதுக்கத்தில் நேற்று இடம்பெற்ற தனது முதலாவது நத்தார் தின உரையில் அவர் இதனை குறிப்பிட்டார். உலகெங்கிலும் உள்ளமோதல்களைமுடிவுக்குக்கொண்டு வருமாறு தனது செய்தியில் திருத்தந்தை குறிப்பிட்டார்.

ஆயுதங்களின் பேரிரைச்சல் ஓய வேண்டும்சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன், சம்பந்தப்பட்ட தரப்பினர் நேர்மையான மற்றும் மரியாதையான நேரடிப் பேச்சுவார்த்தையில் ஈடுபடத் துணிய வேண்டும்.

தற்போது அமெரிக்கா தலைமையில் நடைபெற்று வரும் இராஜதந்திர முயற்சிகள் வெற்றியளிக்க வேண்டும் என்றும் பிரார்த்திப்பதாக அவர் தெரிவித்தார்.

புனித பேதுரு பேராலயத்தில் ஆற்றிய உரையின் போது, காசாவில் உள்ள பாலஸ்தீன மக்களின் மனிதாபிமான நிலைமைகள் குறித்தும் திருத்தந்தை கடும் கவலை தெரிவித்தார்.

“இயேசு ஒரு எளிய மாட்டுத் தொழுவத்தில் பிறந்தார் என்பது கடவுள் எளிய மக்கள் மத்தியில் தங்கியதைக் காட்டுகிறது.

அப்படியிருக்கையில், பல வாரங்களாக மழையிலும் குளிரிலும் காசாவில் கூடாரங்களில் வாடும் மக்களை நாம் எப்படி நினைக்காமல் இருக்க முடியும்?” என்று அவர் கேள்வி எழுப்பினார்.

போரினால் வீடுகளை இழந்து இடம்பெயர்ந்துள்ள 2.1 மில்லியன் மக்களின் துயரங்களையும், குளிர்கால புயல்கள் அவர்களின் நிலையை இன்னும் மோசமாக்கியுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

யுத்தங்களினால் ஏற்படும் இடிபாடுகளையும், ஆறாத காயங்களையும் கண்டனம் செய்த அவர், அமைதி என்பது வெறும் வார்த்தைகளால் அல்லாமல், பரஸ்பர உரையாடல்கள் மூலமே சாத்தியமாகும் என்றார்.

வத்திக்கான் நகரில் குழுமியிருந்த ஆயிரக்கணக்கான விசுவாசிகள் மத்தியில் அவர் ஆற்றிய இந்த உரை, போரினால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு ஒரு நம்பிக்கையூட்டும் செய்தியாக அமைந்துள்ளது.



# இன்றைய ராசி பலன்கள் -26.12.2025




இன்று விரும்பிய பலன்கள் கிடைக்கும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். உங்களுக்கு சாதகமான பலன் கிடைக்கும் வகையில் பயனுள்ள திட்டங்களை தீட்டுங்கள்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். பல நன்மைகளை அடைவதற்கான சாத்தியம் உள்ளது. கூடுதல் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

உங்கள் நெருங்கிய நண்பர் ஒருவரின் திருமண விழாவில் இருவரும் கலந்து கொண்டு மகிழ்வீர்கள். இது உங்களின் வாழ்க்கைத் துணைக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

பண வரவு சாதகமாக உள்ளது. உங்களின் சேமிக்கும் ஆற்றல் உயரும், இதனால் பொருளாதார பாதுகாப்பு காணப்படும்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று மகிழ்ச்சி அலை வீசும். முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலன்களைத் தரும்.

உங்களின் தனித்தன்மைக்கான பாராட்டைப் பெறுவீர்கள். உங்கள் கீழ் பணிபுரிபவர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்களின் தகவல் பரிமாற்றம் மூலம் உங்கள் துணையுடன் நல்லுறவை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் திருப்திகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு உயரும். புதிய முதலீடுகளுக்கு திட்டமிடலாம்.

இன்று நல்ல ஆரோக்கியம் காணப்படும். உங்களிடம் உறுதியும் ஆற்றலும் நிறைந்திருக்கும்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கலாம். தைரியம் மற்றும் உறுதி கொண்டால் நன்மை கிடைக்கும். இன்று மொத்தத்தில் வளர்ச்சி கிடைக்கும். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

நீங்கள் புத்துணர்ச்சியோடு வேலையை மகிழ்ச்சியுடன் செய்வீர்கள். உங்கள் திறமை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச வேண்டும். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சாதகமாக இருக்கும். இன்று அதிர்ஷ்டமான நாள். பண வரவு காணப்படும்.

உங்கள் மன வலிமை காரணமாக இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.




இன்று உங்களுக்கு சாதகமான பலன்கள் கிடைக்காது. உங்கள் செயல்கள் சுமுகமாக நடக்க அதிக முயற்சிகள் எடுக்க வேண்டும். சில சமயங்களில் நம்பிக்கை இழப்பீர்கள். தன்னம்பிக்கையுடன் செயல்பட்டால் வெற்றி காணலாம்.

அதிக பணிகளை சந்திக்க நேரும். உங்கள் சக பணியாளர்களுடன் சகஜமாகப் பழகவும்.

நீங்கள் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உங்கள் துணையிடம் புரிந்துகொண்ட மனநிலையோடு பழக வேண்டும்.

நிதிநிலைமை சீராக இருக்காது. இன்றைய செலவினங்களை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. தகுந்த மருத்துவ சிகிச்சை மேற்கொள்வது நல்லது.




இன்றைய நாள் உங்கள் பொறுமையை சோதிக்கும். மகிழ்ச்சியுடனும் திருப்தியுடனும் இருப்பது நல்லது. இன்று தெளிந்த மனதுடன் இருந்தால் உங்களுக்கு சாதகமான முடிவுகளை எடுக்கலாம்.

இன்று பணிகள் இறுக்கமாக காணப்படும். பணியின் போது தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

உங்கள் மனதில் உள்ள கசப்பான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் குழப்பம் ஏற்படும். உறவின் நல்லிணக்கம் பாதிக்கும்.

இன்று தேவையற்ற செலவினங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும். சிறிது பணம் இழப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

இன்று முதுகுவலி வருவதற்கான வாய்ப்பு உள்ளது. பிரார்த்தனை அல்லது தியானம் மேற்கொள்வது நல்லது.




இன்று உங்களுக்கு சாதகமான பலன்கள் கிடைக்காது. உங்கள் செயல்கள் சுமுகமாக நடக்க அதிக முயற்சிகள் எடுக்க வேண்டும். சில சமயங்களில் நம்பிக்கை இழப்பீர்கள். தன்னம்பிக்கையுடன் செயல்பட்டால் வெற்றி காணலாம்.

அதிக பணிகளை சந்திக்க நேரும். உங்கள் சக பணியாளர்களுடன் சகஜமாகப் பழகவும்.

நீங்கள் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உங்கள் துணையிடம் புரிந்துகொண்ட மனநிலையோடு பழக வேண்டும்.

நிதிநிலைமை சீராக இருக்காது. இன்றைய செலவினங்களை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. தகுந்த மருத்துவ சிகிச்சை மேற்கொள்வது நல்லது.




இன்று மகிழ்ச்சியளிக்கத்தக்க வகையில் வளர்ச்சி காணப்படும். உங்களிடம் எதிர்காலத்தைப் பற்றிய பரந்த நோக்கு காணப்படும். உங்கள் இலக்குகளில் வெற்றி அடைய கடினமாக உழைப்பீர்கள். உங்கள் வழியில் வரும் தடைகளை தகர்த்தெறிவீர்கள்.

நீங்கள் பலனை அதிகம் எதிர்பார்க்காமல் பணியாற்றுவீர்கள். இதனால் குறித்த நேரத்தில் பணிகளை ஆற்றுவீர்கள். மேலதிகாரிகளின் பாராட்டையும் ஆதரவையும் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையாகவும் விசுவாசமாகவும் இருப்பீர்கள். இதனால் இருவரும் நல்ல உறவை பராமரிப்பீர்கள்.

பணப்புழக்கம் அதிகமாக காணப்படும். வங்கியிருப்பு உங்களுக்கு சாதகமான வகையில் பராமரிப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சுமுகமான பலன்கள் காணப்படும். உங்கள் லட்சியங்களை அடைய இந்நாளை பயன்படுத்திக் கொள்ளலாம். இன்று உங்கள் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் உறுதியானது. இன்று நீங்கள் முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். உங்கள் பணிக்கு மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையிடம் நம்பிக்கை உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவருக்கும் இடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று பணப்புழக்கம் சீராக இருக்கும். இன்று நிதி வளர்ச்சிக்கு உங்கள் ஆற்றலை பயன்படுத்திக் கொள்ளலாம்.

இன்று பெரிய அளவிலான ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் இருக்காது. நீங்கள் இன்று அதிக ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் -26.12.2025




இன்று நீங்கள் உற்சாகத்துடன் இருக்க வேண்டும். அதிக சிந்தனைகளை தவிர்க்க வேண்டியது அவசியம். ஆன்மீகத்தில் ஈடுபட்டு அமைதி காணலாம்.

அதிக பணிகள் காரணமாக பணியில் தவறுகள் செய்ய வாய்ப்புள்ளது. உங்கள் பொறுப்புகளை ஆற்றும் போது கவனமாக ஆற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் எரிச்சலும் கோபமும் அடைவீர்கள். எனவே உங்கள் பிரியமானவரிடம் நட்பு முறையோடு பழகுவது நல்லது.

அஜாக்கிரதை காரணமாக பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. நிதி நிலைமையை மோசமாக்கக்கூடிய வகையில் தேவையற்ற செலவுகள் ஏற்படும்.

செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் ஏற்படலாம். உணவு முறையில் கவனம் தேவை.




இன்று நீங்கள் ஆன்மீகத்தில் ஈடுபடும் சூழல் ஏற்படும். இதனால் உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும். சமூக கூட்டங்களில் கலந்து கொள்வீர்கள். புதிய நண்பர்களை உருவாக்கிக் கொள்வீர்கள்.

வெற்றிகரமான பலன்களைக் காண கடினமாக உழைக்க வேண்டும். சில பணிகள் முடிக்க முடியாமல் நிலுவையில் வைக்க வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்பட்ட உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க அத்தகைய உணர்வு-களை தவிர்க்க வேண்டும்.

இன்று கூடுதல் செலவினங்கள் காணப்படும். கடன் வாங்க நேரலாம்.

மன உளைச்சல் காரணமாக தோள் வலி ஏற்படலாம். தியானப் பயிற்சி மூலம் ஆறுதல் பெறலாம்.




இன்று காணப்படும் கடினமான சூழல் காரணமாக தன்னம்பிக்கை குறைந்து காணப்படும். நம்பிக்கையை வளர்த்துக் கொள்வதன் மூலம் இந்தச் சூழ்நிலைகளை ஜெயிக்கலாம். பிரார்த்தனை நல்ல பலன் தரும்.

பணிகளைக் குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. பணியில் தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்களின் குழப்பமான மன உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்த எண்ணுவீர்கள். இருவரும் சமமாகப் பழக மகிழ்ச்சியாக நட்புடன் பழக வேண்டும்.

இன்று பண இழப்பு ஏற்படலாம். உங்களின் பிரியமான ஒருவரின் உடல் நிலைக்காக பணம் செலவு செய்ய நேரும்.

தோல் சம்பந்தமான ஒவ்வாமை காணப்படும். எண்ணெய் பதார்த்தங்களை தவிர்க்க வேண்டும்.




இன்று பதற்றமான சூழ்நிலை காணப்படும். முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள் அல்ல. இன்று சில விஷயங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும்.

கூடுதல் பணிகள் காரணமாக குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. பணிகளின் போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை காண்பிப்பீர்கள். உறவில் நல்லிணக்கத்தைப் பேண அதனை தவிர்த்தல் நல்லது.

வீட்டுப் புனரமைப்பிற்காக பணம் செலவு செய்ய நேரலாம். தேவையற்ற செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

தாயின் உடல் நலத்திற்காக செலவு செய்ய நேரும். இது உங்களுக்கு வருத்தத்தை ஏற்படுத்தும்.

# 182 பயணிகளுடன் கட்டுநாயக்கவில் தரையிறங்கிய கசகஸ்தான் விமானம்




குளிர்கால சுற்றுலாப் பருவத்தை முன்னிட்டு, கசகஸ்தான் நாட்டின் “எயார் அஸ்தானா” விமான சேவைக்குச் சொந்தமான முதலாவது விமானம் நேற்று பிற்பகல் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது.

இந்த முதலாவது விமானத்தில் 182 சுற்றுலாப் பயணிகள் மற்றும் 8 பணியாளர்கள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

எதிர்வரும் 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரை இந்த விசேட விமான சேவைகள் தொடரவுள்ளன.

ஒவ்வொரு வாரமும் திங்கள் கிழமை மற்றும் வியாழக்கிழமைகளில் கசகஸ்தானில் இருந்து இலங்கைக்கு நேரடி விமானப் பயணங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இலங்கையின் சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் நோக்கில் இந்த நேரடி விமான சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குளிர்காலத்தை முன்னிட்டு அதிக எவான ஐரோப்பிய மற்றும் மத்திய ஆசிய சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.